## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No.109/2020

**09.04.2026**

## P.W.3- கருப்பாயி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது கணவரின் பூர்வீக ஊர் குருவித்துறை ஆகும். நான் குருவித்துறையிலிருந்து கோவில்பட்டிக்கு எப்போது குடிவந்தோம் என்றால் நாங்கள் கோவில்பட்டியிலேயே தான் குடியிருந்து வருகிறோம். எனக்கும், எனது கணவருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் நான் 2வது தாரம் ஆகும். எனது கணவருக்கு முதல் தாரம் உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் கோவில்பட்டி தான். எனக்கு ராசுத்தேவர் முதல் கணவர் தான். எனக்கு தெய்வேந்திரன், மகேந்திரன், மூவேந்திரன் என 3 மகன்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் பற்றி தெரியாது. தாவா சொத்து கிழமேல் பாசன வாய்காலுக்கு தெற்காக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.60-9சி என்றால் தெரியாது. எனது மகன்கள் மூவேந்திரன் மற்றும் மகேந்திரன் பெயரில் சொத்து உள்ளது என்றால் சரிதான். எந்த வருடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் தெரியாது. எனது பெயரில் 1985ம் வருடம் கிரையம் வாங்கி, மகனுக்கு எழுதிக்கொடுத்தேன். மேற்படி சொத்தில் எனது இரண்டு மகன்கள் தனித்தனியாக வீடு கட்டியுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி சொத்தை மூக்கையாவிடமிருந்து கிரையம் பெற்றேன். தாவா சொத்து சந்தனம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கிய வருடம் ஞாபகமில்லை. சென்டு ரூ.500 என 5 சென்டு வாங்கினேன். சந்தனத்தின் வாரிசுகள் ஊரில் உள்ளனர். அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு போடும்போது சந்தனம் உயிருடன் இருந்தார். எனது மகன் தெய்வேந்திரனை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி ஊரில் முக்கியமான பிரமுகர் என்றால் சரிதான். அவருக்கு நிறைய விவசாய நிலங்கள் உள்ளன என்றால் சரிதான். எனது கணவர் மற்றும் எனது மகன்கள் விவசாயக்

கூலி வேலைக்கு செல்கிறார்கள். பிரதிவாதியின் தோட்டத்தில் நானும், எனது மகன்களும் ஆரம்ப காலகட்டத்தில் வேலை பார்த்தோம் என்றால் சரியல்ல.

வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் எனது மகன்கள் மூவேந்திரன் மற்றும் மகேந்திரன் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் சர்வே எண்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்துள்ள வீட்டு வரி, மின்கட்டண ரசீதுகள் சர்வே எண்.60-9சி-யில் கட்டுப்பட்டது என்றால் சரியல்ல. எனது மகன் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

**Sd/-P.S.Ruskin Raj,**
**Sub Judge,**
**Usilampatti.**